2002 மே 7]

அனைத்தையும் கழுதை மூலமாக மேலே கொண்டு சென்று 35 இலட்ச ரூபாய் செலவிலே இப்போது கோவில் கட்டி குடமுழுக்குச் செய்திருக்கிறார்கள். பாதை அமைப்பதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். இதிலே அம்மாவினுடைய அரசு அனைத்துத் திருக்கோவில்களை பராமரிப்பது போல, இந்தத் திருக்கோவிலுக்கும் பாதை அமைத்துக் கொடுக்க வேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகின்ற கோரிக்கையை நிறைவேற்ற சட்டமன்ற உறுப்பினர், இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய நிதியிலேயிருந்து அவர்கள் நிதி கொடுக்க முன்வருவார்களேயானால், இந்த ஆண்டே அந்தப் பணியைத் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும். பவானி வட்டம், ஊராட்சிக்கோட்டை, அருள்மிகு வேதகிரீஸ்வரர் மற்றும் வரதராஜப் பெருமாள் திருக்கோவில் மலைமீது சுமார் 600 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. இக்கோவில் சட்டப் பிரிவு 46(3)-ன்கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள், படி அமைக்கப்படுமா, அவ்வளவுதான்.

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: யோசிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 295 திரு. சி. சண்முகம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

295—

சோடியம் மின் விளக்கு

***7313—திரு. சி. சண்முகம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தேர்வு நிலைப் பேரூராட்சிக்கு சோடியம் மின் விளக்கு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது செயல்படத் தொடங்கும்?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பூந்தமல்லி பேரூராட்சிக்கு சோடியம் மின் விளக்கு அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் நல நிதித் திட்டத்திலோ அல்லது தனியார் நிதியுதவி பெற்றோ அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூந்தமல்லி பேரூராட்சியில் ஏற்கெனவே 465 சோடியம் ஆவி விளக்குகளும், 707 குழல் விளக்குகளும் உள்ளன. இவை போதுமான அளவிற்கு இல்லையென்று சொன்னால், அந்தப் பேரூராட்சிக்குச் சட்டமன்ற உறுப்பினர் நிதி மற்றும் தனியார் உதவியோடு மின் விளக்கு அமைக்கின்ற திட்டத்திற்குத் தொடர் செலவினமாக மின் கட்டணம் கூடிக்கொண்டே இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு நல்ல அடிப்படை வசதி செய்ய வேண்டுமானால் செய்து கொடுக்கலாமே தவிர, தொடர்ந்து செலவினத்தை உருவாக்குகின்ற ஒரு காரியத்திற்குச் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நிதியைப் பயன்படுத்துவது சரியாக இருக்காது என்பது என்னுடைய ஆலோசனை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. சண்முகம்.

திரு. சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பூந்தமல்லி பகுதியைத் தவிர, எனது தொகுதியில் ஆவடி பகுதி. திருநின்றவூர், பட்டாபிராம் அந்தப் பகுதிகளில் Tube Light-ஆவது—மின் அழுத்தம் குறைவான 40 வாட்ஸ் Tube Light ஆவது—சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து போடுவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்குமா என்று பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

2002 மே 7]

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்கின்றபோது, பேரூராட்சி நிருவாகம் அதனைச் செயல்படுத்துவதற்கு முன்வரும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 296, திருமதி வளர்மதி ஜெபராஜ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

296—

குடிநீர் வசதி

***18632—திருமதி வளர்மதி ஜெபராஜ்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த மூன்றாண்டுகளாக மதுரை மேற்குத் தொகுதியிலுள்ள மேலப்பொன்னகரம், சண்முகநாதபுரம் மற்றும் சுற்று வட்டாரங்களில் குடிநீரில் கழிவுநீர் கலந்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): மதுரை மாநகராட்சி எடுத்த நடவடிக்கையின் மூலமாகக் கழிவுநீர் குடிநீருடன் கலப்பது தவிர்க்கப்பட்டு, மேலப்பொன்னகரம், சண்முகநாதபுரம் மற்றும் சுற்று வட்டாரங்களில் தற்பொழுது சுத்தமான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி வளர்மதி ஜெபராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியை எழுப்பியபொழுது குடி தண்ணீரில் சாக்கடை கலந்து வந்தது. இப்போது அதிகாரிகள் சரி செய்துவிட்டதாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மதுரை மேற்குத் தொகுதியைப் பொறுத்தவரையில், கடந்த மூன்று ஆண்டுகளாகவே திடீரென்று குடி தண்ணீரிலே சாக்கடை கலப்பதும், அதை அதிகாரிகள் சரி செய்வதும், தற்காலிக முடிவை அதிகாரிகள் ஏற்படுத்திக் கொடுப்பதும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS